# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கைக் கலைக்கழகம் (திருத்தம்) சட்டம்

---

*[1987, நவம்பர் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---


**1987,** நவம்பர் மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை: சதம் 45 தபாற் செலவு: சதம் 75

# 1987 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கைக் கலைக்கழகம் (திருத்தம்) சட்டம்

[1987 நவம்பர் 25 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 57/84

இலங்கைக் கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கைக் கலைக்கழக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப் பீடு செய்யப்படும் இலங்கைக் கலைக்கழகச் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "கல்வி அமைச்சருடனான கலந் தாலோசனையுடன் அமைச்சரினால் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரினால்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 273 ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "கல்வி அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால்; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச் சரினால்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத் தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட் புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(5அ) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள, கழகத்தினது எவரேனும் உறுப்பினர், கழகத்தினது ஏதேனும் கூட்டத்திற்குச் சமுகமளிக்க இயலாதவரா யிருக்குமிடத்து,

(அ) அவர் தவிசாளராகவிருக்கின்ற குழாத்தின் உறுப்பினரொருவரை அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து அவரது இடத்தில் செய லாற்றுமாறு பெயர்குறித்து நியமிக்கலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய பெயர்குறித்த நியமனத்தை, கழகத்தின் தலைவருக்கு எழுத்தில் தெரிவித்தல் வேண்டும்."

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அமைச்சரும் கல்வி அமைச்சரும்", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சர்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படு கின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கழகத்தின் நிதியம். 14. (1) கழகமானது தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (அ) கழகத்தின் பாவனைக்கென மானியக் கொடை அல்லது கடன் மூலம் பாராளு மன்றத்தினால் காலத்திற்குக் காலம் வாக் களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

2—ஏ 098512—2,800 (87/09)

(ஆ) கழகத்தினால், அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கொடைகள்மூலம் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்,

கழகத்தின் நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

(3) கழகத்தினால், அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கழகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

"கழகத்தின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

15. (1) கழகத்தின் நிதியாண்டு, பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(2) கழகத்தின் வரவு செலவு பற்றியும் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றியும் முறையான கணக்குப் புத்தகங்களை வைப்பிக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பிலான அரசியல் அமைப்பினது 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் கழகத்தினது கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".